# Research Proposal

இலக்கணம் என்பது நாம் பிழையில்லாமல் பேசுவதற்கும் எழுதுவதற்கும் ஒரு கருவியாக செயல்படுகிறது. மொழிக்கு விதியாக அமைகின்றன. ஆனால் வாழ்வியலுக்கும் இலக்கணம் வகுத்தது தமிழ் மொழியில் தான். தொல்காப்பியர் இயற்றிய பொருளதிகாரம் தமிழ்மக்களின் வாழ்வியலைக் கூறுகிறது. வாழ்வியல் நூல்கள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதையும் விளக்குகிறது. பொருளதிகாரத்தில் 9 இயல்கள் உள்ளன. அக வாழ்விற்கும் விதிகளை வகுத்து ஒழுங்கு முறையை கடைப்பிடித்து வாழ்ந்தது தமிழர்களே. பொருளதிகாரம் அகவொழுக்கத்தில் புலப்படும் மெய்ப்பாடுகளைக் கூறுகிறது அக இலக்கண செய்திகளை பண்டைய பாடல்களுடனும் நூல்களுடனும் ஒப்பிட்டு எவ்வாறு புலப்படுத்தின என்பதை உளவியல் கருத்தோடு மெய்ப்பிக்க விரும்புகிறேன் .